Downloaded From : http://cbseportal.com/

# மாதிரி வினாத்தாள் 2017 - 2018

## SAMPLE QUESTION PAPER 2017 - 2018

பத்தாம் வகுப்பு | மொத்த மதிப்பெண்கள். 80

X STD | MAXIMUM MARKS: 80

**தமிழ்**
TAMIL

கால அளவு: 3 மணி நேரம்

Time Allowed: 3 Hours

.................................................................................................................

பகுதி. அ. (படித்தல் உரைநடைப்பகுதி)

SECTION A (Reading Comprehension) Marks: (15)

1. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. 5 x 1 = 5

இந்திய மல்பெரி பழம் என அறியப்படும் நோனி, தமிழில் நுணா என அழைக்கப்படுகிறது. தமிழகப் பாரம்பரிய மருத்துவத்தில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளில் மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பசுமை மாறாத் தாவரமான இது வெப்ப மண்டலப் பகுதியில் பரவிக் காணப்படுகிறது. இதன் பழங்களை உணவாகவும், பிற பாகங்களோடு சேர்த்து மருந்துப் பொருளாகவும் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதுவரை குறைந்தது 200 வகையான பயன்தரும் உயிர்வேதிப் பொருட்களும், ஆற்றல்மிகு உயிர்கூட்டுப் பொருட்களும் இத்தாவரத்தில் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக இத்தாவர வேர்களில் உள்ள டாம்னகேந்தால், மொரின்டோன் புற்றுநோயைக் குணப்படுத்தும் தன்மையுடையது.

தமிழகம், கேரள மாநிலங்களில் நல்ல மழைப்பொழிவு, மண்வளம் உள்ள இடங்களில் நோனி நன்கு வளரும். நோனி எந்தப் பகுதியில் விளைந்தாலும் வருடம் முழுவதும் புதிய இலைகள், பழங்களை உற்பத்தி செய்வது இதன் சிறப்பம்சம். நோனி உடல் ஹார்மோன்களைச் சமன் செய்து, பல்வேறு உடற்செயலியல் தொடர்பான உபாதைகளிலிருந்து நிவாரணம் தருகிறது. இம்மருத்துவப் பயன்கள் சித்த மருத்துவத்திலும் நன்கு அறியப்பட்டவை ஆகும். எனவே தான் நோனி எனப்படும் நுணா ஆற்றல்மிகு அதிசயத்தாவரம் என்றழைக்கப்படுகிறது.

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



(i) நோனி தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(அ)நுங்கு (ஆ)நுணா (இ)நுனி (ஈ)சங்கு

(ii) நோனி தாவரத்தில் எத்தனை வகையான பயன்கள் கண்டறியப்பட்டுள்ளன?
(அ)200 (ஆ)201 (இ)202 (ஈ)203

(iii) நோனி எந்தப் பகுதியில் பரவிக் காணப்படுகிறது?
(அ)காற்று மண்டலம் (ஆ)வாயு மண்டலம் (இ) வெப்ப மண்டலம்
(ஈ)குளிர் மண்டலம்

(iv) நோனியின் வேர்கள் எந்த நோயைக் குணப்படுத்தும் தன்மையுடையவை?
(அ) காசநோய் (ஆ)புற்றுநோய் (இ)இளைப்பு (ஈ)பக்கவாதம்

(v)நோனியின் மருத்துவப் பயன்கள் எம்மருத்துவத்திலும் உள்ளன?
(அ)சித்த மருத்துவம் (ஆ)யுனானி (இ )ஹோமியோபதி (ஈ)அலோபதி

2. பின்வரும் பத்தியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. 5 x 1 = 5

உடல் அமைப்பை உள்ளபடி சித்தரிப்பதைக் காட்டிலும் உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளியிடுவதே முக்கிய குறிக்கோளாகக் கொண்டவை அஜந்தா சித்திரங்கள். அஜந்தா ஓவிய முறையைத் தழுவிய ஓவியங்கள் தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் ஓரளவு காணப்படுகின்றன. புதுக்கோட்டைக்கு அருகே உள்ள சித்தன்னவாசலில் அத்தகைய சித்திரங்கள் சில மிகத் தெளிவோடு காணப்படுகின்றன. இலங்கைத் தீவில் ஸிக்ரி என்ற இடத்தில் உள்ள குன்றில் மனிதர்கள் நெருங்க முடியாத உயரத்தில் உள்ள குகையில் இத்தகைய சித்திரங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் கி.பி.550லிருந்து கி.பி.650க்குள் வரையப்பட்டவை ஆகும்.

தற்காலத்தில் ஓவியக்கலையில் ஐரோப்பிய பாணி புகுந்துவிட்டது. வண்ணம் தீட்டுவதிலும் புதுமைகள் தோன்றிவிட்டன. புகைப்படமும் சினிமாவும் வந்த பிறகு வண்ண அலங்காரங்களுக்கு அளவே இல்லை. இத்தாலியில் மைக்கேல் ஆஞ்சலோ என்ற ஓவியர் கன்னிமேரியின் படங்களை வரைந்தார். இவருடைய படங்கள் உலகப் பிரசித்தி அடைந்தது. இந்தியத் தொல்பொருள் துறையினரால் பராமரிக்கப்பட்டுவரும் அஜந்தா குகைகள் பற்றி சீனப்பயணி யுவான்சுவாங் குறிப்பெழுதியிருக்கிறார்.

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



(i) உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளியிடுவது எது?
(அ)கல்வெட்டுகள் (ஆ)சித்திரங்கள் (இ)திரைப்படங்கள்
(ஈ)நாடகங்கள்

(ii) அஜந்தா ஓவியங்களைப் போல ஓவியங்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்தில் காணப்படுகின்றன?
(அ)சித்தன்னவாசல் (ஆ)தஞ்சாவூர் (இ)மதுரை (ஈ)காஞ்சிபுரம்

(iii) இலங்கைத் தீவில் உள்ள குகையில் காணப்படும் சித்திரங்கள் எக்காலத்தவை?
(அ)கி.பி.770..790 (ஆ)கி.பி.550...650 (இ)கி.மு.100 (ஈ)கி.பி.2000

(iv)கன்னிமேரி படங்களை வரைந்து பிரசித்தி பெற்றவர் யார்?
(அ)ஆஞ்சலோ (ஆ)ரவிவர்மா (இ)செகப்பிரியர் (ஈ)பீட்டர் சாலமன்

(v)அஜந்தா குகைகள் பற்றிக் குறிப்பெழுதியவர் யார்?
(அ)மெகஸ்தனிஸ் (ஆ)பாகியான் (இ)யுவான் சுவாங்
(ஈ)மார்க்கோபோலோ

3.பின்வரும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக.

1 x 5 = 5

நவீனம் மட்டும் வளரவில்லை. அதன் கூடவே மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களும் வளர்ந்து வருகின்றன. சமீப காலமாக மக்களை மிகவும் பதறி, சிதறி ஓட வைக்கிறது பன்றிக் காய்ச்சல். ஹைதராபாத், தெலுங்கானா, விஜயவாடா என்று அண்டை மாநிலங்களில் ஆரம்பித்து, புதுக்கோட்டை, திருச்சி, தூத்துக்குடி என அடுத்தடுத்து இந்தப் பன்றிக் காய்ச்சலால் இறந்து போனவர்கள் பற்றிய செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன. குறிப்பாக நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைவாக இருக்கும் குழந்தைகளை மற்றும் கருவுற்ற பெண்களை இந்தப் பன்றிக் காய்ச்சல் குறிவைத்துத் தாக்கி வருகிறது. இதன் காரணமாக குழந்தைகளுக்குச் சாதாரண காய்ச்சல் வந்தாலே, ஒரு வேளை இது பன்றிக் காய்ச்சலாக இருக்குமோ என்று பெற்றோர் கண்களில் மரண பயத்தை ஏற்படுத்திவிட்டது.

ஆரோக்கியமான உணவு மருந்துகள், மற்றும் ஓய்வு போன்றவற்றின் மூலம் ஒரு வாரம் முதல் அதிகபட்சம் பத்து நாட்களுக்குள் இந்த நோயிலிருந்து மீண்டுவிடலாம். எந்த வகைக் காய்ச்சல் வந்தாலும் சரி, அலட்சியம் காட்டாமல், காய்ச்சல் ஆரம்பித்த உடனே காலம் தாழ்த்தாமல் மருத்துவமனைக்குச் சென்றால் ஆபத்திலிருந்து விடுபடலாம்.

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



பகுதி - ஆ (எழுதுதல்)

SECTION B (Writing) Marks: (14)

4. பருவமழை பாதிப்பால் நீராதாரங்களில் நீர் இருப்பு குறைவதால் கிணறுகளைத் தூர் வாரி குடிநீர் வழங்க மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் வரைக. 1 X 6 = 6

(அல்லது)

உடற்பயிற்சியால் உடலும் கல்வியும் மேம்படும் என்பதை வலியுறுத்தி அயலூரில் வாழும் உன் நண்பனுக்கு மடல் வரைக.

(இரண்டிலும் உன் பெயரும் முகவரியும்) க.வளவன் / க.வான்மதி
12, வள்ளலார் தெரு, திருமூலர் காலனி, காரைக்கால், புதுவை மாநிலம்.

5. ஏதேனும் ஒன்றை விவரித்துக் கட்டுரை வரைக. 1 X 8 = 8

1. முன்னுரை - நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - நோய் வரக் காரணம் - இந்தியாவை அச்சுறுத்தும் நோய்கள்- தீர்க்கும் முறை - முடிவுரை.

2. முன்னுரை - ஒழுக்கத்தின் மேன்மை - மாதா, பிதா, குரு, தெய்வம் - மாணவர் கடைப்பிடிக்க வேண்டியவைகள் - ஒதுக்க வேண்டியவைகள் - வள்ளுவர் கூறும் ஒழுக்கமுடைமை - முடிவுரை

3. முன்னுரை - அறிவியல் வளர்ச்சி - செய்தி ஊடகங்களின் கடமை - வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் பணிகள் - ஊடகங்களின் பணி - நாட்டு நலனில் ஊடகங்களின் செயல் - தீமைகளை நீக்க ஊடகங்கள் உதவுதல் - முடிவுரை

பிரிவு.இ. (இலக்கணம்)

SECTION. C. (Grammar) Marks: (15)

6. சான்று தருக (மூன்றனுக்கு மட்டும்) 3X 1 = 3

1.இடையில் வரும் ஐகாரக்குறுக்கம்
(அ) ஐயா (ஆ) ஐவர் (இ) சட்டை (ஈ) இடையன்

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



2.மருதநிலத்திற்குரிய தெய்வம்
(அ) வருணன் (ஆ) முருகன் (இ) கொற்றவை (ஈ) இந்திரன்

3.ஒருபொருட்பன்மொழி
(அ) நடுமையம் (ஆ) குன்றின் மேலிட்ட (இ) பசுமரத்தாணி
(ஈ) அங்குமிங்கும்

4.தனிமொழி
(அ)கண் (ஆ)அந்த மான் (இ)படம் பார்த்தான் (ஈ)ஓடி விளையாடினான்

5.நிரை கவர்தல்
(அ)வாகை (ஆ)வெட்சி (இ)வஞ்சி (ஈ)காஞ்சி

7.நிரப்புக. (மூன்றனுக்கு மட்டும்) 3X 1 = 3

1.ஆசிரியப்பாவின் ஓசை......................
(அ)செப்பலோசை (ஆ)அகவலோசை (இ)துள்ளலோசை
(ஈ)தூங்கலோசை

2.முல்லைத் திணைக்குரிய ஊர்
(அ)பேரூர், மூதூர் (ஆ)பட்டினம், பாக்கம் (இ)பாடி, சேரி (ஈ)சிறுகுடி

3.வினா...............வகைப்படும்
(அ)ஆறு (ஆ)ஐந்து (இ)எட்டு (ஈ)நான்கு

4.மாணவன் ஆசிரியரிடம் வினவும் வினா.............
(அ)அறிவினா (ஆ)அறியாவினா (இ)ஐயவினா (ஈ)ஏவல் வினா

5.புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும்..............அணி
(அ)வஞ்சப் புகழ்ச்சி அணி (ஆ)தற்குறிப்பேற்ற அணி
(இ)சிலேடை அணி (ஈ)பின்வருநிலையணி

8.கூறியவாறு மாற்றுக. (மூன்றனுக்கு மட்டும்) 3X 1 = 3

1.நல்லவை (அசை கூறுக)
(அ)நிரை நிரை (ஆ)நேர் நேர் (இ)நிரை நேர் (ஈ)நேர் நிரை

2.மருளும் (மகரக் குறுக்கமாக மாற்றுக)
(அ)மருண்ம் (ஆ)மருள் (இ)மருளம் (ஈ)மரும்

3.ஞாயிறு (ஒருபொருட்பன்மொழி ஆக்குக)
(அ)மீமிசை ஞாயிறு (ஆ)ஞாயிறு (இ)பெரிய ஞாயிறு (ஈ)மா ஞாயிறு

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



4.பாடாண் திணை (பிரித்து எழுதுக)
(அ)பாடு + ஆண் + திணை (ஆ)பாடாண் + திணை
(இ)பாட்டு + ஆண் + திணை (ஈ)பாட்டு + ஆண்திணை

5.பாலை (சரியான தொழிலைப் பொருத்துக)
(அ)களை எடுத்தல் (ஆ)கிழங்கு அகழ்தல் (இ)வழிப்பறி செய்தல்
(ஈ) ஏறு தழுவல்

9.இலக்கணக் குறிப்பு எழுதுக (மூன்றனுக்கு மட்டும்) 3X 1 = 3
1.செம்மொழி
(அ)ஈறுபோதல் (ஆ) ஆதிநீடல் (இ)இனமிகல் (ஈ)இனையவும்

2.மண்ணாசைக் கருதி போருக்குச் செல்லுதல்
(அ)கரந்தை (ஆ)காஞ்சி (இ)வஞ்சி (ஈ)வெட்சி

3.ஆனி, ஆடி
(அ)முதுவேனிற்காலம் (ஆ)குளிர்காலம் (இ)இளவேனிற்காலம்
(ஈ)கார் காலம்

4.கற்சிலை
(அ)இயல்புப் புணர்ச்சி (ஆ)குற்றியலுகரப் புணர்ச்சி
(இ)திரிதல் விகாரப் புணர்ச்சி (ஈ)தோன்றல் விகாரப் புணர்ச்சி

5.வெற்றிலை மென்றான்
(அ)இனங்குறித்தல் (ஆ)வெளிப்படை (இ)ஒருபொருட் பன்மொழி
(ஈ)அடுக்குத் தொடர்

10.சரியான தொடரைத் தேர்வு செய்க (மூன்றனுக்கு மட்டும்) 3X 1 = 3

1. (அ)விடை எட்டு வகைப்படும்
(ஆ)விடை ஏழு வகைப்படும்
(இ)விடை ஐந்து வகைப்படும்
(ஈ)விடை நான்கு வகைப்படும்

2. (அ)அதிரப் பொருதல் வாகை
(ஆ)அதிரப் பொருதல் கரந்தை
(இ)அதிரப் பொருதல் தும்பை
(ஈ)அதிரப் பொருதல் வெட்சி

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



3. (அ)விரி உவமையின் வேறுபெயர் உவமைத்தொடர்
(ஆ)விரி உவமையின் வேறுபெயர் உவமைத் தொகை
(இ)விரி உவமையின் வேறுபெயர் வேற்றுமைத் தொகை
(ஈ)விரி உவமையின் வேறுபெயர் தொகைநிலைத் தொடர்

4. (அ)சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ஔகாரம்
(ஆ)சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ஐகாரம்
(இ)சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் மகரம்
(ஈ)சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ஆய்தம்

5. அ) நிலமும் பொழுதும் முதற்பொருள்
ஆ) நிலமும் பொழுதும் கருப்பொருள்
இ) நிலமும் பொழுதும் உரிப்பொருள்
ஈ) நிலமும் பொழுதும் புறப்பொருள்

பிரிவு. ஈ (இலக்கியம் / தமிழ்ப் பாடநூல்கள்)

SECTION D. (Literature / Textbooks) Marks: (36)

11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையை எழுதுக.

5 x 1 = 5

முன்னிரவு நேரம், சென்னை நகரத்து இலிங்கிச் செட்டித் தெருவில் புராணத் தொடர் சொற்பொழிவைக் கேட்க மக்கள் கூட்டம் ஆர்வத்துடன் திரண்டிருந்தது. அன்று வரவேண்டிய சொற்பொழிவாளர் வரவில்லை. ஆனால் வந்தவரோ வெள்ளாடை அணிந்து அழகொழுகும் திருமுகத்துடன் கூடிய ஒன்பது வயதுச் சிறுவர். அச்சிறுவர் அனைவரையும் வணங்கித் தம் அண்ணன் வர இயலாமையைக் கூறி உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்ற பெரிய புராணப் பாடலைப் பாடினார். அனைவரது கருத்தையும் கவரும் வண்ணம் நெடுநேரம் அதற்குப் பொருள் கூறினார்.

யாவரும் வியக்கும் வண்ணம் அன்று உரை நிகழ்த்தியவர்தான் பிற்காலத்தில் சாதிகளிலும் மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்களை அவற்றிலிருந்து மீண்டுவர, சமரச சுத்த சன்மார்க்கப் பாதை அமைத்தவர் வள்ளலார்.

வினாக்கள்.

1.வெள்ளாடை அணிந்து வந்த சிறுவன் யார்? அவன் வயது என்ன?
2.சிறுவன் எப்படி சொற்பொழிவைத் தொடங்கினான்?

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



3.மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்கள் மீண்டு வர வள்ளலார் செய்தது என்ன?

4.புராணத் தொடர் சொற்பொழிவு எங்கு எப்போது நடந்தது?

5.மக்கள் கூட்டம் எதற்காக ஆர்வத்துடன் திரண்டிருந்தது?

12. பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்குச் சரியான விடை தேர்ந்து எழுதுக.

4 x 1 = 4

"பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா"

வினாக்கள்.

1.இச்செய்யுள் அடிகள் இடம் பெற்ற நூல்
(அ)நந்திக் கலம்பகம் (ஆ)கலித்தொகை (இ)புறநானூறு
(ஈ)நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

2.பணை என்னும் சொல்லின் பொருள்..........
(அ)அரசு (ஆ)ஆல் (இ)மூங்கில் (ஈ)தென்னை

3.இந்நூலின் பாட்டுடைத் தலைவன்....
(அ)மூன்றாம் நந்தி வர்மன் (ஆ)பாண்டியன் நெடுஞ்செழியன்
(இ)குலோத்துங்கன் (ஈ)சேரலாதன்

4.தமிழில் உள்ள சிற்றிலக்கியங்கள் மொத்தம்...
(அ)96 (ஆ)92 (இ)95 (ஈ)93

13.பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக.

4 X 1/2 = 2

1.அருவினை என்ப ..................... கருவியாற்
காலம் ......... செயின்.

2.பொருளல் லவரைப் பொருளாகச் .........
பொருளல்ல ................ பொருள்.

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/



14.எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8

1.கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.
2.தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

3.இறைவன் திருவடியை வணங்குகின்றவருக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை?
4.புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

15.எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி. 2 x 5 = 10

1.செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விவரி.
2.அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.
3.தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக.
4.தமிழரின் மருத்துவ அறிவுகுறித்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
5.வள்ளலார் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் குறித்து எழுதுக.

16.ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 1 X 7 = 7

1.மெல்ல மெல்ல மற
2.பாரத ரத்னா எம்.ஜி.ஆர்
3.குறட்டை ஒலி.

.................................................................................................................................

Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE